வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE
Girraween Public School, 9 Bando Road Girraween NSW 2145


# ஆண்டு 2 - பேச்சுப் போட்டி

**போட்டி நடைபெறும் திகதி: 12.05.2018 (1.00 pm)**

---

**நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.**

## தாய் மொழியே வாய்மொழியாம்.

- தமிழ் எங்கள் தாய்மொழி. அது இனிமையான மொழி. அதுவே எமக்கு வாய் மொழியாகவும் இருக்க வேண்டும் அல்லவா?
- ஆங்கிலம் பேசுகின்ற நாட்டிலே நாம் வசிக்கின்றோம். அதனால் அன்றாடம் தமிழைப் பேசுவது சிரமமாக இருக்கின்றது. எனவே தமிழ் வாய் மொழியாகப் பலருக்கு இருப்பது இல்லை.
- தமிழ் இயற்கையான மொழி. வாயைத் திறக்கையில் வரும் ஒலி 'அ'. அதுவே அதன் முதல் எழுத்து. வாயை மூடினால் வருல் ஒலி 'ம்'. இவை இரண்டும் சேர்ந்து எமது வாழ்வில் நாம் முதல் காணும் அம்மாவைக் குறிக்கிறது.
- தமிழ் மொழி மிகவும் தொன்மையானது.
- இத்தகைய அருமையான மொழி தொடர்ந்து வாழ, நாம் தமிழில் பேச வேண்டும். தமிழை வாய்மொழியாகக் கொள்வோம்.

தமிழில் பேசுவோம், தமிழராய் வாழ்வோம்.

நன்றி, வணக்கம்.